சூழலுக்கு ஏற்ற தீர்வினையும், அதனால் ஏற்படும் நன்மையினையும் தேர்ந்தெடுக.

சூழல் 1

அண்டை வீட்டாரின் மேல் அதிருப்தி கொண்ட அம்மா, எப்பொழுதும் அவர்களின் ஏதேனும் குறைகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டே இருப்பார்.

தீர்வு : ____________________

நன்மை : ____________________

சூழல் 2

அண்டை வீட்டுப் பாட்டி சில நாள்களாகவே இருமிக் கொண்டே இருப்பதை நீ அறிவாய்.

தீர்வு : ____________________

நன்மை : ____________________

சூழல் 3

உன் குடியிருப்புப் பகுதிக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் அண்டை வீட்டார் அருகிலுள்ள கடைத் தெருக்களை அறிந்திருக்கவில்லை.

தீர்வு : ____________________

நன்மை : ____________________

சூழல் 4

உன் அண்டை வீட்டுச் சிறுமி எப்பொழுதும் பள்ளிக்கு நடந்தே செல்வாள்.

தீர்வு : ____________________

நன்மை : ____________________

அவளையும் மகிழுந்தில் ஏற்றிக் கொள்ள அப்பாவிடம் கேட்பேன்.

அம்மாவின் தவற்றை மனம் நோகாதவாறு சுட்டிக் காட்டுவேன்.

அவர்களை அழைத்துச் சென்று அனைத்தையும் காட்டி வருவேன்.

அவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பெற்றோரிடம் உதவி கேட்பேன்.

புரிந்துணர்வு ஏற்படும்

நட்பு மேலோங்கும்

அன்பு மேலோங்கும்

நல்லுறவு ஏற்படும்

LIVEWORKSHEETS

ஈ. சூழலுக்கு ஏற்ற மனவுணர்வுகளைத் தேர்ந்தெடுத்திடுக.

1. வீட்டின் திறவுகோலின்றி வெளியே காத்திருக்கும் அண்டை வீட்டுச் சிறுமியைப் பெற்றோர் வரும் வரை உன் வீட்டில் அமரச் செய்தால்.....

| | |
|---|---|
| பெற்றோர் மகிழ்ச்சி கொள்வர் | |
| பெற்றோர் கடிந்து கொள்வர் | |

2. அண்டை வீட்டுத் தாத்தாவுக்கு மளிகைக் கடையில் பொருள் வாங்க உதவினால்.....

| | |
|---|---|
| அன்பு பாராட்டுவார் | |
| தள்ளாமை எண்ணி வாடுவார் | |

3. திறன்பேசியில் செயலியைப் பதிவிறக்கம் செய்யத் தெரியாத அண்டை வீட்டாருக்கு உதவினால்...

| | |
|---|---|
| புரிந்துணர்வு குறையும் | |
| மனநிறைவு கொள்வார் | |



LIVEWORKSHEETS